# கொழுந்து
# 2019



கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா
Kollankaladdy Makkal Ontrium UK

subara

THE SMART CHOICE



# Business Insurance

- Offices & Shops
- Professional Indemnity
- Public & Employers liability
- Construction & Contractor
- Motor Fleet

Speak to us today for more details

**020 3823 1061**

sutha@subara.co.uk

Subara Business Centre
4 Weald Lane
Harrow HA3 5ES

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா
பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து 2019

17.02.2019

ஞாயிற்றுக் கிழமை

மாலை 5.30 மணி

Chief Guest

**Councillor Thay Thayalan**

Mayor of the Royal Borough of Kingston upon Thames

Guest of Honour

**Dr (Mrs) Punithamalar Sridharan**

The Broadway, Broadway, Barking. IG11 7LS



# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய சைவ வித்தியாசாலை
வாழிய இதன் புகழ் நாளும்
தாயெனத் தொளுவோம் தரு பயன் பெறுவோம்
நேயமாய் என்றும் நினைவினில் வைப்போம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

தொல்புகழ் அமைந்த கொல்லங்கலட்டி
எனும் இடம் உள்ளன வாழி
சைவமாம் அமிழ்தும் தமிழ் மொழி தேனும்
சாரும் விஞ்ஞானமும் வளர்ப்பாய்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

வேலுப்பிள்ளை நூலறி புலவர்
நிறுவிய புகழ் மறவோம்
சிற்றம்பலமாம் சீர்பணி புரிந்தார்
முகாமையாளர் அவர் பெயர் நினைவோம்
விநாயகர் அருளால் விளங்கிடும் தாயை
விருப்புடன் நாள்தோறும் பணிவோம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

பாடியவர்: புலவர் ம பார்பதிநாதசிவம்



# MESSAGE FROM THE CHIEF GUEST

THE ROYAL BOROUGH OF
KINGSTON
UPON THAMES



## MESSAGE FROM THE MAYOR OF KINGSTON

It gives me great pleasure to send this message of good wishes on the occasion of the 'Kolunthu 2019' Cultural event on 17 February 2019 organised by Kollankaladdy Makkal Ontrium (UK). My wife and I feel deeply honoured to be invited to be special guests at this occasion.

I warmly congratulate all those involved in setting up and developing Kollankaladdy Makkal Ontrium UK over the years. Kollankaladdy village suffered enormously during the long protracted civil war. Many families were displaced from their homes and had to settle elsewhere. The homes, the school and the temple were badly damaged. The organisation was set up soon after the end of the war, in a time of need to help and support the rebuilding and development programme of the village. The primary school 'J/Kollankaladdi Saivaththamil Vidthyasalai', 'Pillayar Temple', the 'Keniyadi and the 'Madam' are famous landmarks of the village. It is important that well-wishers of the village contribute and support the organisation in its developmental programmes to restore the village back to its golden era.

Kollankaladdy is surrounded by famous historical places such as Mavidapuram Kadasamy temple, Keerimalai Sivan temple and the Keerimalai sea beaches. I have fond memories of walking through the village to the temples and enjoying the beautiful green scenery. Kollankaladdy is famous for its high quality 'Betel plant', an evergreen perennial with glossy heart-shaped leaves. It is popular in South East Asia and used at auspicious ceremonies and consummation. Most people from the village had their secondary education in the nearby Mahajana College, famous for producing a high number of university entrants and winning soccer championships. Kollankaladdy can also be proud of producing successful professionals and politicians who contributed enormously to the society and the country. It is important that we remember them and share the fantastic history of the village. I am sure with the dedication and commitment of the members and well-wishers, Kollankaladdy Makkal Ontrium (UK) will be successful in its great effort to develop the village.

We wish this cultural event every success and would like to extend our sincere thanks and congratulations to the organisers, participants, sponsors and volunteers for their untiring effort to make this a memorable and enjoyable event for everyone.

Councillor Thay Thayalan
Mayor of the Royal Borough of Kingston upon Thames

# MESSAGE FROM THE GUEST OF HONOUR



It gives me great pleasure to participate in Kalaikolunthu 2019 to raise funds for our village, Kollankaladdy. I was raised in Kollankaladdy, studied as well married there and lived there for almost 30 years. I feel very proud to call Kollankaladdy our family home.

Kollankaladdy is a holy village, in the Srilankan district of Jaffna, under the Tellippalai divisional secretariat. It's surrounded by the Keerimalai coast which is famous for the Naguleswaram Shivan temple, the Maviddapuram Kandaswamy temple, and Mahajana College.

The people of Kollankaladdy, including our family, had their basic education from Kollankaladdy Saivatamil Vidyasalai where my eldest sister previously worked as a teacher. We continued our education at the nearby Mahajana College. My siblings, nephews and nieces have enormously benefitted from this education. Both schools have together produced numerous successful people, including professionals, both home and abroad.

My family had the privilege of living within close proximity of both the primary school and the Pilliar temple. One of my oldest memories is waking up to the sound of Thiruvempavai Pakthi songs. I have fond recollections of visiting the temple with my friends to worship over the ten days.

After the war, Kollankaladdy was under the control of the army and our people were displaced and have been living in different locations for the last thirty years. Very few people have returned. Those who originated from Kollankaladdy, living both in Sri Lanka and overseas are now coming together and helping rebuild the village back to its former glory. This will in turn encourage more people to return to Kollankaladdy, Jaffna, Sri Lanka.

Makkal Ontrium has assisted in the development of the primary school, reconstruction of the temple and also renovation of the 'kerni'. Ontrium has united the UK based people of Kollankaladdy. We encourage others to join the Ontrium and further assist in development projects.

I have visited our village several times and I have witnessed first-hand the vast improvements following the war. This is thanks to the hard work of people from both home and abroad.

I feel greatly honoured to take part in this occasion and help raise funds to provide education for children of underprivileged families in Kollankaladdy. I hope we can all contribute to this great effort, initiated by the UK committee, Makkal Ontrium.

***Dr (Mrs) Punithamalar Sridharan***

# ஒன்றியத் தலைவரின் செய்தி



கலைக் கொழுந்து 2019 மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப நாம் எமது ஒன்றியத்தின் மூலமாக எம்மால் இயன்ற உதவிகளை நமது அழகிய ஊருக்கும் அங்கு வாழும் உறவுகளுக்கும் புரிந்து வருகின்றோம். மாசி 2018 இல் பொறுப்பேற்ற புதிய நிர்வாக குழுவினராகிய நாம், உத்வேகத்துடன் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக....

## புராதன கேணி புனரமைப்பு

பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன் மாருதப்புரவிகவல்லியினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பழமையும் சரித்திரப்பிரசித்தியும் வாய்ந்த கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் தேவஸ்தானத்தின் கேணியைத் திருத்தியமைக்க எமது நிர்வாகக்குழு தீர்மானித்து, பிரித்தானிய வாழ் எம் ஊர் உறவுகளான உங்களுடன் தொடர்பு கொண்ட போது குறுகிய காலத்தில் நீங்கள் அனைவரும் இணைந்து £5500 நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## தற்காலிக ஆசிரியர், தொழிலாளருக்கான வேதனம்

147 ஆண்டுகள் பழமை வாய்ந்த யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம், யுத்த அனர்த்தங்களால் மிகவும் சிதைவுற்று இருந்தது. உங்களின் உதவிகளினாலும் எமது முன்னைய நிர்வாகக்குழுக்களினது முயற்சிகளினாலும் பாடசாலை மீண்டும் உத்வேகத்துடன் இயங்கத் தொடங்கியுள்ளது. ஆயினும் பாடசாலை நிர்வாகத்தினர் நாளாந்தம் பல்வேறு சவால்களை இன்னமும் எதிர்நோக்குகின்றனர். நாம் எம்மால் இயன்ற உதவியாக, அங்கு பணிபுரியும் தற்காலிக ஆசிரியர் மற்றும் பாடசாலையை துப்பரவு செய்பவர் ஆகியோரின் இரண்டு வருட வேதனத்தை வழங்க முடிவெடுத்துள்ளோம். இதற்காக £1000 ஒதுக்கியுள்ளோம் என்பதினையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்

## சிறார்களின் கல்வி மேம்பாட்டுத் திட்டம்

இன்று இவ் விழா மூலம் திரட்டப்படும் நிதி எம் ஊரில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக உபயோகிக்கப்படும் என்பதை பெருமிதத்துடன் கூற விரும்புகிறேன். முக்கியமாக முன்பள்ளிச் சிறார்களுக்கு (3-5 வயதினர்) நல்லதொரு அடித்தளத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த தீர்மானித்து உள்ளோம்.

## பொது விளையாட்டு மைதானம் அமைத்தல்

மாணவர்களின் கவனம் சிதறாமல் இருக்கவும், வளமான எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கவும் நமக்கு ஒரு பொது விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கான நிலத்தை வாங்கிக் கொடுக்க உதவும் படியும் அவ்வாறு உடனடியாக செய்ய முடியாவிடின் தற்காலிக தீர்வாக ஒரு காணியை குத்தகைக்கு எடுத்து தருமாறும் ஊர்ப் பெரியவர்கள் எம்மிடம் ஒரு வேண்டுகோள்விடுத்துள்ளனர். இதற்காக உங்களின் ஆலோசனைகளையும், காணி தந்து உதவக் கூடியவர்களையும் நாம் எதிர்பாத்து நிற்கின்றோம்.

இன்று இந்த இனிய மாலைப்பொழுதில் பசுமை நிறைந்த எமது இளமைக்கால நினைவுகளை மீட்டிப் பார்ப்பதோடு மட்டும் நின்று விடாது தொடர்ந்தும் எம்மோடு கை கோர்த்து எம்மூரை ஒரு நவீன மாதிரிக் கிராமமாக கட்டியெழுப்ப இணையுமாறு உங்கள் அனைவரையும் உரிமையுடன் அழைக்கின்றேன்.

இணைந்து ஆதரியுங்கள் தொடர்ந்து வெற்றி பெறுவோம்

நன்றியுடன்
**சின்னத்துரை கிருபாகரன்**
தலைவர்

# போசகர் திரு கமலக்கண்ணனின் வாழ்த்துச் செய்தி



பிரித்தானியாவில் கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் ஒன்று உருவாவதற்கு காரணமாக இருந்தவன் என்கின்ற வகையிலும் அதன் ஆரம்ப நான்கு ஆண்டுகளாக அதன் தலைவராக இருந்து ஒன்றியத்தின் வளர்ச்சியில் பங்கு எடுத்தவன் என்கின்ற முறையிலும் இன்று இந்த ஒன்றியத்தின் புதிய தலைமை மற்றும் நிர்வாகக்குழு கலைக்கொழுந்து 2019ஐ சிறப்பாக முன்னெடுப்பது மிகவும் மகிழ்ச்சியை தருகின்றது. அத்துடன் இதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதி எமது கிராம சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தபடும் என்கின்ற புதிய தலைமையின் முடிவானது மிகவும் பாராட்டுதலுக்குரியது.

இறைபக்தி மற்றும் கடவுள் நம்பிக்கையும் ஒருவருக்கு தானாகவே வருவதும் உணர்வதும் ஆகும் ஆனால் கல்வி அறிவு என்பது ஓர் ஆசானினால் மட்டுமே ஊட்டக்கூடியது. படிப்பறிவற்ற சமூகம் வாழ்ந்ததாக வரலாறு இல்லை எனலாம். ஓர் சமூகம் நல்ஒழுக்கங்களுடன் முனேற்றமாக வாழ்வதற்கும் வளர்வதற்கும் கல்வி அறிவு இன்றியமையாதது. அதனால் தான் முன்னோர்கள் நூறு கோவில்களை கட்டுவதிலும் பார்க்க ஓர் பாடசாலையை கட்டுவது கோடி புண்ணியம் என்றார்கள்.

இதன் வெளிப்பாடாகவே எனது பாட்டனார் சீமான் ஆறுமுகம் வேலுப்பிள்ளை உபாத்தியார் அவர்கள் 1872ம் ஆண்டு தனக்கு சொந்தமான கோவிலுக்கு முன்பாக உள்ள காணியில் ஓர் பாடசாலையை உருவாக்கி அரசின் அங்கீகாரம் பெறும் வரை வேதனம் ஏதுமின்றி எமது கிராம மக்களுக்கு கல்வி சேவை ஆற்றினார். இதனால் கொல்லங்கலட்டி நிறைய படித்த மக்களை கொண்டதொரு கிராமமாக திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

எமது ஊரில் இருந்து அரச உயர் பதவிக்கு சென்ற பலரது ஆரம்பக்கல்வி எமது பாடசாலையில் அமைந்தது என்பது நிதர்சனமான உண்மையாகும். அத்துடன் மகாஜனகல்லூரியில் கல்வி பயில்வித்த ஆசிரியர் குழாமில் குறிப்பிடத்தக்க ஆசிரியர்கள் எமது கிராமத்தில் இருந்தே சென்றார்கள் என்றால் அது மிகையாகாது. இன்று இந்த ஒன்றியம் எமது ஊரின் சிறார்களின் கல்வி வளர்ச்சியை நோக்கி தனது உதவி கரங்களை நீட்டியுள்ளது இதன்மூலம் அவர்களது அடிப்படை கல்வி மேம்படும் என்பதில் ஐயம் இல்லை.


இதன் பணிகள் மேலும் வளர எனது வாழ்த்துக்கள். அத்துடன் ஒன்றியம் முன்னெடுக்கும் கலைக்கொழுந்து 2019 சிறப்புற எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் அருளை வேண்டுவதுடன் ஒன்றியத்தின் செயல்பாடுகள் மேம்புற எனது வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும்.

வணக்கம்

இங்கனம்

**சி.கமலக்கண்ணன்**

Patron, KMO (UK)




ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் / ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில்

Sri Veeragaththi Vinajakar Temple / Srimath Sithambareswara Suvami Temple

புனருத்தாரண சபை Rehabilitation Committee

Temples Regd No : HA/5/JA/997
Committee Regd No :

Mavai Kollankaladdy,
Tellippalai, Sri Lanka.
............/........../201.......

President
K.Thuraisinkam

Secretary
G.Annaparipooranam

Treasurer
S.Paheetharan

## வாழ்த்துச் செய்தி

இங்கிலாந்து தேசத்தில் வாழும் கொல்லங்கலட்டி ஊர் மக்களால் உருவாக்கப்பட்ட "கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்" 2011ம் ஆண்டிலிருந்து வெளியிட்டு வரும் "கொழுந்து" எனும் வெளியீடு இந்த ஆண்டும் வெளியாக இருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

"நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா — நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்"

என்ற ஒளவையாரின் முது மொழிக் கேற்ப கொல்லங்கலட்டியில் பிறந்து வாழ்ந்த மக்கள் தம் ஊரின் மீது கொண்ட நன்றியுணர்வையும் பற்றினையும் நினைவு கூர்ந்து கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயத்திற்கும் இங்குள்ள பாடசாலை சனசமூக நிலையம் போன்றவற்றிற்கும் பேருதவி புரிந்து வருவது எமக்கு பெருமை தரும் விடயமாகும்.

வெற்றிலைக் கொழுந்து வளரும் எம் மண்ணின் நினைவாக வெளியிடப்படும் இக் கொழுந்து எமது கொல்லங்கலட்டி மக்களின் சிறப்புக்களை உலகறியச் செய்வது மட்டுமல்ல எமது மண்ணை மீண்டும் வளம் பெறச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இயங்கி வருவது பாராட்டுதற்குரியதாகும்.

பிரித்தானியா கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியத்தின் செயற்பாடுகள் வீரகத்தி விநாயகர் அருள் பெற்று மென் மேலும் ஆல் போல் ஓங்கி வளர பாராட்டி வாழ்த்தி நிற்கிறோம்.

தலைவர்
கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரனசபை

President
Rehabilitations Comm[illegible]
Sri Veeragaththi Venalaga[illegible]mple
Srimath Sithambareswa[illegible] Temple
Kollankalad[illegible]



# யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை
# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை வணங்கி பிரித்தானியாவில் வாழும் கொல்லங்கலட்டி உறவுகள் ஒன்றுகூடி நடாத்தும் "கலைக்கொழுந்து" விழா சிறப்புற நடைபெறவும், "கொழுந்து" மலர் சிறப்பாக வெளிவருவதற்கும் யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலய கல்விச் சமூகம் சார்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

147 ஆண்டுகாலமாக இப்பிரதேச மக்களின் அறிவுப்பசியினைப் போக்கி பல்வேறு துறைசார்ந்த அறிஞர்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கிவரும் யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் மீள்குடியேற்றத்தின் பின்னர் 2013இல் மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்கள் பாடசாலையில் சேரும் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டமையினால் பாடசாலை மூடப்படும் அபாய நிலையை எட்டியிருந்தது.

எனினும் அப்போதைய காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் பழையமாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மாணவர் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

நான் 03.01.2017இல்; அதிபராக இப்பாடசாலையில் கடமையேற்றபோது மாணவர் எண்ணிக்கை 29 ஆகக் காணப்பட்டது. தற்போது (2019) 48 ஆக உயர்வடைந்துள்ளது. அத்துடன் எமது பாடசாலையுடன் சேர்த்து இயக்கப்படும் முன்பள்ளியின் மாணவர் எண்ணிக்கை 15 ஆகக் காணப்படுகின்றது.

தற்போது எமது பாடசாலைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவும், பாடசாலை தொடர்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் விழிப்புணர்வு காரணமாகவும் அதிகளவான மாணவர்கள் எமது பாடசாலைநோக்கி வருகின்றனர். இந்த வருடத்தில் மாத்திரம் 18 மாணவர்கள் புதிதாக இணைந்துள்ளனர்.

இவர்களில் 16 மாணவர்கள் தரம் - 01 இற்கு புதிதாக இணைந்துள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது மூன்றுமடங்கு அதிகரிப்பாகும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிவருபவர்கள் பெற்றோர்களே. இவர்களுடன் இணைந்து ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நிறுவுனர் குடும்ப உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் தங்களாலான ஒத்துழைப்பை வழங்கிவருகின்றனர்.

கடந்த ஆண்டில் எமது பாடசாலையிலிருந்து தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்திருந்தனர்.

இது தொடர்ச்சியாக நான்காவது வருடமாக எமது மாணவர்கள் பெற்றுக்கொடுத்த "100% சித்தி" என்ற சாதனையாகும்.

கடந்த வருடத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேடமான வகுப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்ததுடன் அவர்கள் வகுப்புக்களுக்குச் சென்றுவருவதற்கான போக்குவரத்து வசதியினையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம். இவ்வருடமும் இவ்வாறன செயற்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளோம்.

எமது பாடசாலையின் எதிர்கால இலக்குகளை சரியான முறையில் அடைந்துகொள்வதற்கு

புலம்பெயர் உறவுகளின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

எமது பாடசாலைக்குக் கடந்த காலங்களில் நிறுவுனர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நிதி உதவியினைப் பெற்றே முன்பள்ளி ஆசிரியருக்கான வேதனத்தை வழங்கிவந்துள்ளோம். அத்துடன் பழையமாணவர்கள் சிலரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான உதவிகளை அவ்வப்போது வழங்கி வருகின்றனர்.

எனினும் எதிர்காலத்தில் எமது பாடசாலையின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதில் இடர்களை எதிர்நோக்கியுள்ளோம். குறிப்பாக

- முன்பள்ளி ஆசிரியருக்கான வேதனத்தை வழங்குதல்
- தரம் 4,5 மாணவர்களுக்கான மேலதிக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்
- பாடசாலைச்சுத்தம்
- பாடசாலைப் பாதுகாப்பு வசதி (காவலாளி)


போன்றவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு நிதிவளம் இன்மையால் இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எமது பாடசாலைப் பெற்றோர்களில் 95 வீதமானவர்கள் கூலி வேலை செய்பவர்களே. இதுவரை காலமும் பெற்றோர்களிடமிருந்து நாம் எந்தவிதமான நிதி அறவீட்டினையும் மேற்கொள்ளவில்லை.

எனவே கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் - பிரித்தானியா இந்த உதவிகளை எமக்கு வழங்குவார்கள் என எமது பாடசாலைச் சமூகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. தங்களின் இந்தச் செயற்பாடுகள் ஊடாக  பாடசாலையை மேலும் முன்னேற்றிச் செல்லலாம் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

புலம்பெயர்தேசமொன்றில் ஓர் ஊரைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி எடுக்கும் இவ்விழாவானது சிறப்பாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஒற்றுமையான செயற்பாடுகள் நீண்டகாலம் நிலைத்து நிற்க விநாயகரை வேண்டி விடைபெறுகின்றேன்

நன்றி
**திரு.நா.பிரியந்தன்**
அதிபர்
யா /கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்



# மாவிட்டபுரம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
# Maviddapuram South Women Rural Development Society


மாவிட்டபுரம் தெற்கு.
தெல்லிப்பழை.

Regd No/ பதிவு இல: NP/DRD/JH12/J232/W1123
Date of Register/ பதிவுத் திகதி: 21/01/2014

Maviddapuram South,
Tellippalai.


......./......../201.....

## எமது மாதர்சங்க வளர்ச்சியில் கொல்லங்கலட்டி லண்டன் ஒன்றியத்தின் பங்களிப்பு.

சோழநாட்டு இளவரசி மாருதப்புரவிகவல்லி பூசித்த வீரகத்தி விநாயகர் ஆலயத்தை மையமாக கொண்டு விளங்கும் எம் கிராமம் வெற்றிலையும் வாழையும் வளமாக வளரும் சிறப்பு மண்ணாகக் கொண்டிருப்பது இயற்க்கை தந்த கொடையாகும் நாவலர் வழிகாட்டலில் சைவமும் தமிழும் வளர்ச்சி பெற தெல்லிப்பழைக் கோவிற்பற்றிலே முதன் முதலாக அமரர் வேலுப்பிள்ளை அவர்களால் ஒரு சைவ தமிழ் பாடசாலை நிறுவப்பட்டமை எம் கிராமத்திற்கு பெருமை தரும் விடயமாகும்.

சட்ட வல்லுனரான மதிப்புக்குரிய குமாரசாமி அரசியல் சாதனையாளரான மதிப்புக்குரிய வன்னியசிங்கம் ஆன்மிககொடையாளரான முதலியார் சங்கரப்பிள்ளை போன்ற பல சாதனையாளர் வாழ்ந்த எமது கிராமம் பண்டு தொட்டு தனித்துவமான இன சமய கலாச்சாரத்தை பேணி வளர்ச்சி பெற்றிருந்தது. 1990 இல் நடைபெற்ற போர் சூழலால் எமது ஊர் சிதைவடைந்து காடாக மாறியது. இந் நிலையில் மீண்டும் எமது கிராமத்தை எழுச்சி பெறச் செய்ய புலம் பெயர்ந்த எம் உறவுகளும் எம் மக்களும் அயராது உழைத்ததன் விளைவாக எமது கிராமத்தில் பல அபிவிருத்தி நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஆவற்றுள் 2014 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது மாதர் சங்கம் வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கும் வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலைக்கும் பெண்தலைமைத் குடும்பங்களுக்கும் பல்வேறு சேவைகளைப் புரிந்து வருகிறது.

இச் சங்கம் வளர்ச்சி பெற்று வருவதற்கு எமது கொல்லங்கலட்டி மக்களின் லண்டன் ஒன்றியம் துணைபுரிந்து வருவது பாராட்டத்தக்கது. சிறப்பாக எமது மண்ணில் பிறந்து லண்டன் ஒன்றியத்தை பிரதிநித்துவம்படுத்தும் திருமதி கௌரி ஸ்ரீ க்ணேசகுமாரும் அவரது குடும்பத்தினரும் எங்கள் சங்கம் வளர்ச்சி பெற தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டி வருவது பாராட்டத்தக்கதாகும். அன்னார் தன்னை வளர்த்தெடுத்த மண்ணை நன்றி உணர்வோடு என்றும் மறவாது எமது சங்கத்தின் தேவைகளை நிறைவு செய்து வருவது எமக்கு மனநிறைவைத் தருகின்றது. எமது மாதர் சங்கத்திற்கு நிலையான கட்டிடம் நிர்மாணிக்க நிலம் இல்லாத நிலையில் தமது சொந்தக் காணியில் இருந்து 2 பரப்பினை நல்கி பேருதவி புரிந்த திருமதி. கௌரி ஸ்ரீ கணேசகுமாரை என்றும் எமது சங்கமும் கிராம மக்களும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம.அன்னாரை அளப்பொரிய சேவையில் ஈடுபடுத்திய கொல்லங்கலட்டி லண்டன் ஒன்றியத்திற்கு நன்றி கூறுவதில் பெருமை கொள்கின்றோம்.

R. Thanalaksingam
.................................................
பொறுப்பாசிரியர்
வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை
மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பளை.
HA/7/56/14/268

# புதுப் பொலிவுடன் அருள்பாலிக்கும் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம் புராதன வரலாற்றுப் பெருமை கொண்டது. கி.பி8ம் நூற்றாண்டு இந்தியாவின் சோழநாட்டு இளவரசி மாருதப் புரவீகவல்லி மாவிட்டபுரத்தில் பாடிவீடு அமைத்து வாழ்ந்த காலத்தில் ஏக விநாயகர் விக்கிரகங்களை ஏழு இடங்களில் வைத்து வணங்கினாள் என்றும் அதில் முதலாவதாக விநாயகரை வைத்து பூசித்த இடம் கொல்லங்கலட்டி என வரலாறு கூறுகிறது. மாருதப்புரவீக வல்லியால் பிரதிஸ்டை செய்யப்பட்ட விநாயகர் விக்கிரகத்தையே இன்றும் எம் மக்கள் வணங்கி வருகின்றனர் என்பது எமது மூதாதையர் வழி வந்த கதையாகும்.

இத்தகைய தொன்மையும் மகிமையும் கொண்ட எம் ஆலயம் யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த இருபத்தைந்து வருடங்களாக மக்கள் செல்ல முடியாத காடாக இராணுவ பிரதேசமாக மாறியது ஆலய கட்டிடங்கள் யாவும் குண்டுவீச்சுக்களால் அழிவடைந்தது. இந்நிலையில் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் எங்கள் வீரகத்தி விநாயகர் அருளால் 2004ம் ஆண்டு சண்முகநாதக் குருக்கள் தினமும் பூஜை செய்து வந்தார். தொடர்ந்து 2010ம் ஆண்டு ஆலய சூழலில் மீண்டும் பெயர்ந்த எம் ஊர் மக்கள் அனைவரும் எம் மக்களுடன் இணைந்து புனருத்தாரண சபை மூலமாக எழுச்சி பெறச் செய்தமை வீரகத்தி விநாயகரின் அருட் செயலே.

இன்று வீரகத்தி ஆலயமும் கொல்லங்கலட்டி கிராமமும் பழமையும் புதுமையும் கொண்டு எழுச்சி பெற வழிசமைத்த புலம் பெயர்ந்த எம் உறவுகளை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். வீரகத்தி விநாயகர் ஆலயம் இரு இணைந்த முகப்புக்கள் கொண்ட ஆலயமாக புதுமை பெற்றுள்ளது.

தற்பொழுது புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர், சப்பறம், தீர்த்தக்கேனி, மணிக்கோபுரம் என்பன அழகுக்கு அழகு செய்வனவாக அமைந்துள்ளமை ஆலயத்தின் சிறப்பை உயர்வடையச் செய்துள்ளது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மக்களாலும் சூழ அமைந்த பன்னாலை, இளவாலை, தெல்லிப்பழை கிராமங்களைச் சேர்ந்தவர்களாலும் போற்றி வளர்க்கப்பட்ட திருத்தலம் இதுவாகும். மக்கள் கீரிமலை நோக்கி பயணிப்போரும் வழிபடுவர். காலத்தின் கோலத்தால் மக்கள் வாழ்வும் சிதைவுற்றது கோவில்களும் சிதைவடைந்தன. ஆயினும் இறைவன் அருளால் மீண்டும் எழுச்சி பெறும் காலம் உருவாகி உள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடையமாகும்.






## விநாயகர் ஆலய தேர்த்திருப்பணி


தேர் எமது சமய தத்துவங்களை விளக்கும் சின்னமாகவும் கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் பொக்கிஷமாகவும் விளங்குவதோடு ஆண்டவனின் அருளை ஆன்மாக்களுக்கு வாரி வழங்கும் சாதனமாக தேரும் உற்சவமும் அமைகிறது என கூறலாம். தேர்திருவிழா கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 1929ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சகடையில் தேர் கட்டி நடத்தப்பட்டது பின்னர் எமது கிராமத்தைச் சேர்ந்த மண்ணியல் வல்லுனராக சி. கந்தையா து. வை . சரவணமுத்து அவர்களை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட கொல்லங்கலட்டி திருப்பணிச்சபையும் இணைந்து அமைக்கப்பட்ட தேரில் 1965ம் ஆண்டு வீரகத்தி விநாயகர் பக்தர்களுக்கு அருள் புரிந்தார் அத்தேர் யுத்தச் சூழ்நிலையால் அழிவடைந்த நிலையில் மீண்டும் தேர் உருவாக்கப்பட்டது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த விவேகானந்தர் கரிகரன் என்பவரால் இச்சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு 24.01.2016 ம் ஆண்டு தைப்பூச திருநாளன்று வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற்றது. இத் திருப்பணிக்கு உதவிய பெருமகனை எம் ஆலய அடியார்கள் நன்றியுடன் நினைவு கூறுவதை பார்க்க முடிகின்றது.

இப் புதிய இத்தேரை பாதுகாப்பதற்கான தேர் கொட்டகை நிறுவப்பட்டுள்ளது. கோவிலின் அருகே அமைந்துள்ள சைவவித்தியாசாலை நிறுவியவரான திரு.ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியார் நினைவாக அன்னாரின் வழிவந்த உறவினர்கள் அமைத்து தந்தமை தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் பெறப்படும் என்ற வாக்கை நினைவு படுத்துவதாக அமைகின்றது.

## சப்பறமும் திருவாதிரைத்தேரும்

எமது ஆலய மகோற்சவம் வைகாசி மாத பூரணையை தீர்த்தமாக கொண்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றது. மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 8 ம் நாள் சப்பறத்திருவிழா நடைபெறும் இவ் விழாவில் விநாயகப் பெருமான் வலம் வரும் அழகான காட்சி பக்திபரவசத்தை ஏற்படுத்தும் இறைவனின் ஒளி மிகுந்த காட்சி மக்கள் மனத்தின் இருளை போக்கி ஒளி பெறச் செய்யும் என்பது இறை தத்துவமாகும் பல காலமாக எமது ஆலயத்தில் நிரந்தர சப்பறம் இல்லாத நிலையில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த வெளிநாட்டில் வாழும் சி.சிவகுமார் புதிய சப்பறம் ஒன்றை அமைத்துக் கொடுத்தமை பெருமைக்குரிய அறப்பணியாகும். இவ் அழகிய சப்பறத்தில் 25.05.2018 அன்று விநாயகப் பெருமான் பவனி



வந்து மக்களுக்கு அருள்பாலித்தார். இவ் வெள்ளோட்ட நிகழ்வன்று மக்கள் கொண்ட பரவசம் கண் கொள்ளா காட்சியாக இருந்தமை என்றும் மறக்க முடியாது.

திருவெம்பாவை நிறைவு தினமான திருவாதிரை மகோற்சவம் தினத்திற்கான தேரை எமது ஊர் அன்பரான வைரவி செல்வரத்தினம் அமைத்து தந்து அத் தினத்தன்று இறைவனை பவனி வரச் செய்தமை மக்கள் மனங்களில் பதியப்பட்ட காட்சியாகும் ஆலய வளர்ச்சியில் அவரது கரிசனை என்றும் பாராட்டுதற்குரியது.

## புதிதாக அமைக்கப்படவுள்ள திருமணமண்டபம்


எமது ஆலயச்சூழலில் அன்னதான மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என ஆலய புனருத்தாரண சபையினர் மேற்கொண்ட முயற்சி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளமையால் சபை பெருமை அடைகின்றது.

பல வருடங்களுக்கு முன்பு விநாயகர் ஆலயத்தை நிறுவ தம்பு உடையார் எனும் பெருமகனார் தர்மசாதனமாக காணி வழங்கினார் என்பது வரலாற்றுபதிவாக உள்ளது. மீண்டும் அவர் வழிவந்த கு.புரந்திரன் என்பவரால் கொள்வனவு செய்யப்பட்ட ஆலய சூழலில் உள்ள காணி தர்மசாதனமாக ஆலய அன்னதான மண்டபம் அமைக்க வழங்கப்பட்டமை வரலாற்றின் தொடர் நிகழ்வுகளாக கருத முடியும். இக் காணியில் 80 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட மண்டபம் அமைப்பதற்கு 25.11.2018 அன்று அடிக்கல் நாட்டு விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அன்னதான மண்டபம் அமைப்பதற்கு அரசும் மக்களும் பேருதவி புரிந்து வருவதால்

கட்டிடம் வெகு விரைவாக நிறைவு பெற்று பொலிவுடன் திகழும் என்பது எமது இறை நம்பிக்கையாகும். சான்றோர் களையும் சாதனையாளர் களையும் அன்று நாம் பெற்றிருந்தது போல இன்றும் இளைய தலைமுறையினர் எமது ஆலய வளர்ச்சியில் கரிசனையாக இருக்கின்றனர் என்பது மன நிறைவைத் தருகிறது மேலும் எமது வீரகத்தி விநாயகர் ஆலயம் பொலிவுடன் எழுச்சி பெற விநாயகரின் அருளை வேண்டி நிற்கிறோம்.

## புதிதாக அமைக்கப்படவுள்ள கேணித் திருப்பணி





ஆலய தீர்த்தோற்சவம் உட் பிரகாரத்திலுள்ள திருமஞ்சணம் கிணற்றிலேயே தீர்த்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் கேணி அமைந்துள்ளது. இக் கேணி எப்பொழுது எவரால் தோண்டப்பட்டது என எவருக்கும் தெரியாத நிலையில் உள்ளது. இக் கேணி ஆரம்பத்தில் ஆடு மாடு தண்ணீர் குடிப்பதற்கு தோண்டப்பட்டதாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. சில காலங்களுக்கு முன்பு கொல்லங்கட்டியில் வாழ்ந்த திருமதி தையற்பிள்ளை கேணியை துப்பரவாக்கி சுவர்களைக் கட்டியதோடு இளைப்பாறும் மண்டபமும் அமைக்கப்பட்டது. முதன் முதலாக 1969 ம் ஆண்டு வைகாசி மாத மகோற்சவத்தின் போது கேணியில் தீர்த்தம் எடுக்கப்பட்டது பின்னர் 1995 ம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலால் கேணி அழவுற்றது மீண்டும் இக் கேணி ஊர் மக்களின் முயற்சியால் திருத்தப்பட்டு மகோற்சவ தினத்திற்கு தீர்த்தம் எடுக்கும் விநாயகரை கேணிக்கரைப் பிள்ளையார் என சோமசுந்தரப்புலவர் தமது கவிதையால் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. இக் கெணிக்கு அருகாமையில் இருந்த ஆலமரத்தடியிலே மாருதப்புரவீக வல்லி விநாயகரை வைத்து வழிபட்டு வந்தார் என்றும் அதனால் இக் கேணி புனித இடமாக கொள்ளப்படுகிறது.

மிகத் தொன்மையான இக் கேணியை புதுமையுடன் பொலிவுறச் செய்ய கொல்லங்கலட்டி மக்கள் இணைந்த ஐக்கிய இராச்சிய (UK) ஒன்றியம் முன்வந்திருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும் அப் பெருமக்களின் உதவியால் எமது ஆலயச் சூழல் புனித பிரதேசமாக மாறி வருவது இறைவனின் அருட் செயல் என்றே கூற வேண்டும்.



# ஐங்கரன் புகழ்பாடும் அருமைத் தீர்த்தமே

எங்களூரின் பண்புபேணி எழில்மிகு கூட்டும்
எழிலான ஊரின்மைந்தர் புகழினைப் பாடும்
பொங்கிவந்த துயரமதால் நாட்டை விட்டுமே
லண்டன்வாழும் மக்கள்பணி மிகமை பாடுமே

இன்றுநாங்கள் வந்தபோரால் இழந்த பூமியை
இனிதுவந்து வாழும்காலம் தன்னில் பேணிட
நன்றுவந்து என்றுவந்து உதவி நல்கிடும்
எங்கள் மண்ணின் மைந்தர்வாழ் இனிது வாழ்கவே

அன்றுவந்த வேளைமிங்கு ஒன்றுமின்றியே
அழிந்தநிலை கண்டுநெஞ்சம் பதைத்தவேளையில்
நன்றுநாங்கள் செய்வோம்என்றும் உறுதிகூறியே
செயலில்காட்டி நின்றமக்கள் ஒன்றியம் வாழ்கவே

உங்கள் யாலுவகை பூத்திடச் செய்தே
உயரும்கோயில் பணிமுடித்தே அவனிருள்கண்டீர்
இங்குமவன் ஆடும்தீர்த்தத் தடாகம்தானுமே
இனிதுதிருப் பணியாலுயர எண்ணம்கொண்டீரே

அன்றுவல்லி தனக்குமருள் செய்தமேன்மையால்
அருள்முதல் சுரந்துமெமக் கருளுமைங்கரன்
நன்றுவந்து நளினம்கூட்டி எம்மையாளலே
செய்யும்பணி யாவுமிங்கு வாழ்கவாழ்கவே

கோயில்தானும் புதுமைகூட்டி குடமுழுக்கிட்டீர்
கொஞ்சும்தேரில் ஐயன்வர நல்வழிகண்டீர்
நோயில்நீங்கி நாங்கள்வாழச் செய்யுமைங்கரன்
தீர்த்தக்கேணித் திருப்பணிமைய தொடர்ந்துமுடிப்பீர்

புதுமையான தெய்வம்மெங்கள் ஐங்கரன்கோயில்
புகழிலோங்கி நலம்படைக்கச் செய்யுமேன்மையால்
குதுகலமே பொங்கியவன் அருளின்மகிமையால்
இனிதுவாழ வாழ்த்துகின்றோம் வாழ்க வாழ்கவே

உங்கள்பணி யானுவகை பூத்துமகிழ்ந்தோம்
உங்கள்பணி என்றும்தேவை என்றுவுணர்ந்தோம்
உங்கள்பணி யாலுமெங்கள் ஆலயத்தோங்கும்
கோபுரமே எழுந்தழகு கூட்டிடவைப்பீர்

இப்பணியால் என்றென்றும் உம்புகழ் ஓங்கும்
இனிதவன்தன் அருள்மாட்சி உங்களைக்காக்கும்
ஒப்பிலாத பணிமகிமை உவகைகூட்டியே
என்றென்றும் உமைக்காக்கும் அருளும்வாழ்கவே

கருணைவள்ளல் எங்கள்வீர கத்திவிநாயகன்
கருணையொளி தான்பெருகி நிறையும்வழிவழி
தருணத்தில் நிறைபணிகள் செய்துவந்தீர்
வாழ்க வாழ்க நிறைவுற்றோங்கி வாழ்கவாழ்கவே.

கவியாக்கம்
**சு. குகதேவன்**
கொல்லங்கட்டி



# எளிமையான கிராமம்

ஆசியாவின் ஒரு பகுதியான அழகு சொட்டும் ஈழமணித் திரு நாட்டின் வடபால் அமைந்த வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை தென்மேற்கு இறை பகுதியில் கமுகு, கதலியுடன், வெற்றிலையும் செழித்தோங்கும் கிராமமே கொல்லங்கலட்டி என அழைக்கப்படும் அழகிய கிராமம் ஆகும்.

சோழ நாட்டு இளவரசியான மாருதப்புரவீகவல்லி குன்ம நோய் நீங்க வேண்டி தனது பரவாரங்களுடனும் பதினெண் குடிமக்களுடனும் ஈழமணித் திருநாட்டுக்கு வருகைதந்து கொலு இங்கு கட்டி வாழ்ந்ததால் பின் நாளில் இந்த இடம் கொல்லங்கலட்டி என்று அழைக்கப்படுவதாக ஓர் ஊதிகம் உண்டு.

சோழ குமாரத்தியின் குன்ம நோய் நீங்கிய பின்பும் அப்பிரேமையில் இருந்து விடுபட முடியாது தவித்தபோது நகுல முனிவரின் ஆலோசனைக்கு அமைய விநாயக வழிபாடு செய்வதற்காக சோழ நாட்டில் இருந்து விநாயகர் விக்கிரகங்கள் வரவழைத்து முதன் முதலில் தான் கொலுகட்டி வாழ்ந்த இடமான கொல்லங்கலட்டி எனும் திருப்பதியிலே வீரகத்திவிநாயகரை பிரதிஷ்டை செய்தமை சான்றாக இருக்கின்றது.

இவ்வாறான சிறப்பு மிக்க இக்கிராமத்தில் வாழ்ந்த மக்களது கலாச்சாரமும் பண்பும் கொண்ட அரச குடும்ப நடைமுறைக்கு ஏற்றால் போல் அமைந்துள்ளமை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் இக்கிராமத்தைச் சுற்றி பதினெண் குடிமக்களது வாழ்விடங்களும் அமைந்துள்ளமை காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான மகிமை கொண்ட எங்கள் கிராமத்தில் ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆசார சீலர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்து கோவில்கள் இடிக்கப் பட்டு சைவத்தையும் எம் அருந்தமிழையும் கலாச்சாரத்தையும் மாற்றி கிறிஸ்தவ சமயத்தையும் அவர்களது கலாச்சாரத்தையும் மக்கள் மத்தியில் பரப்பிக்கொண்டிருந்த வேளை அதனைத் தடுத்து நிறுத்தி சைவத்தையும் தமிழையும் அவர் தம்கலாச்சாரத்தையும் வளத்தெடுக்கும் நோக்கில் பாடசாலைகளை உருவாக்கி சொற் பொழிவுகளை நடாத்தி சைவத்தையும் தமிழையும் காத்து வந்தார்.

இவரின் சேவையின் பால் ஆர்வம் கொண்ட எம்பதியின் ஆறுமுகம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வாரான ஸ்ரீமான் வேலுப்பிள்ளை அவர்கள் 1872ம் ஆண்டில் இக் கிராமத்தின் ஆர்வம் கொண்ட சிறார்களின் கல்விக் கண்களை திறக்கும் நோக்குடன் வீரகத்தி

விநாயகரின் திருப்பாதங்களுக்கு தனது நிலப் பரப்பினிலே யா/கொல்லங்கலட்டி சைவ தமிழ் வித்தியாசாலையை ஆரம்பித்து தமிழையும், வீரகத்தி விநாயகாரின் திருக்கோவிலின் ஊடாக சைவத்தையும் போதித்து எமது கிராமத்தை புதுமை கொள்ள வைத்தார்.

எமது கிராம மக்கள் முற்று முழுதாக விவசாயத்திலேயே ஈடுபட்டு வந்த போதிலும் இப் பாடசாலையின் தோற்றத்தின் பின்பு சிறந்த கல்வி மான்களாக உருவாகத் தொடங்கினார்கள்.

இயல்பாகவே அடுத்தவர்க்கு உதவும் பண்பும் அறிவும் கொண்ட எமது கிராமத்து மக்கள் ஆசிரியர்களாகவும், பல் துறைகளிலே உயர் அதிகாரிகளாகவும், வைத்தியர்களாகவும் அரச தொழில் பெற்று அன்போடு கூடி வாழ்ந்த வேளையில் 1993ம் ஆண்டு இலங்கையின் போர்ச் சூழல் காரணமாக எழில் கொஞ்சும் எமது கிராமம் சின்னாபின்னமாக்கப்பட்டு சீரழிக்கப்பட்டது.

இளைஞர்கள் யுவதிகள் புகலிடம் தேடி வேறு இடங்களுக்கும், கடல் கடந்த நாடுகளுக்கும் பறந்தனர்.

ஏனையோர் செல்லடிபட்டு, குண்டுபட்டு உறவுகளை இழந்து நிர்க்கதியாய் நின்ற வேளை வீரகத்தி விநாயகப் பெருமானுடைய ஆதீனகர்த்தாவும் பிரதம குருக்களுமான சிவ ஸ்ரீ சண்முகநாத குருக்கள் ஐயா அவர்கள் இராணுவத்தின் கெடுபிடி மத்தியிலும் தனது உடல்நிலை தளர்வுற்று இருந்த போதிலும் அவர் அருளால் எம் கிராமத்தின் அழகையும், எழிலையும் காண வேண்டும் என்ற பேர் அவாவினால் தனது துணைவியாரின் துணையுடன் சகோதரனையும் அழைத்துக்கொண்டு துவிச்சக்கர வண்டிமூலமாக சென்று பூசைகள், திருவிழாக்களை நடாத்தியதன் பலனாக இடப்பெயர்வுகளால் சிதறுண்டு இருந்த மக்கள் ஆலய முன்றலிலே அவனருள் வேண்டிச் சென்றபோது ஒருவரை ஒருவர் கண்ணுண்டு ஆரத்தழுவி கதறி அழுத காட்சியை என்றும் மறக்க முடியாது.

இவ்வாறு குருக்கள் ஐயா அவர்களின் செயற்பாட்டினால் இடம்பெயர்ந்தவர்களும், புலம் பெயர்ந்தவர்களும் ஆலயத்திற்கு வருகின்ற வேளையில் சீரழிந்த எம் கிராமத்தின் சிதறல்களை தொலைநகல் ஊடாக உறவுகளுக்கு தெரியப்படுத்தியும் அறியப்படுத்தியும் வந்ததன் பயனாகவும் எமது கிராம மக்களின் சுய முயற்சி காரணமாகவும் இன்று எமது கொல்லங்கலட்டி கிராமம் எழில் கொஞ்சும் கிராமமாக பொலிவு பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது.

எம் கிராமத்தின் அழகையும் எழிலையும் முழுமையாக நாம் தரிசிக்க எம் அனைவரின் உணர்வு பூர்வமான உதவிகளும் ஒத்துழைப்புகளுமே வழிவகுக்கும் என்பதையும் நாம் உள்ளத்தில் நிறுத்தி செயற்படவேண்டியவர்களாக உள்ளோம்.

என்றும் அன்புடன்

**கிராமத்தான்.**



# வெற்றிலை

நீண்ட பல நாட்களின் பின்பு
நிலைகள் பல மாறிய பின்பு
எம் ஊரின் உறவுகளுக்காய்
சவால்கள் பல கடந்து சமூக அக்கறை
கொண்ட நால்வர் ஒன்று கூடி
அமைத்தனர் ஒரு
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்.

மாசியில் ஒரு மகிழ்வு கூடல் கண்ணுக்கு
விருந்தளிக்கும் கலைக்கொழுந்து
ஆடியில் ஆரவாரமாக நாவுக்கு இனிக்க
நல்லதொரு கோடைகால விழா
எட்டு வருடங்களா நிறைவெனவே வளர்த்து
விட்டோம்
வெற்றிலைக் கொழுந்து வளர்த்த எமக்கு இது
வளர்க்க தெரியாதோ

வேர் ஆயுதமாம் எம்மூர் உறவுகளுக்கு
வேண்டிய பொழுதெல்லாம் ஓடி
உதவுகின்றோம்
வழிபட்ட கோவிலுக்கும்
படித்து வந்த பள்ளிக்கும்
பங்களிப்பு செய்கின்றோம்.

காலங்கள் பல கடந்தும்
கடின உழைப்பின் மத்தியிலும்
கால் பதித்து நாம் நடந்த நம் ஊருக்கு நாம்
செய்வதற்கு
நிறையவே உண்டு.
உள் உணர்வு உள்ளவர்கள் அனைவரும்
ஒன்று சேர்ந்து நட்டு வைத்த
கொழுந்தினை நன்றாக வளர்த்திடுவோம்.

நன்றியுடன்
**மோகன்**

KULENDRAN
IMMIGRATION
LAW CHAMBERS

KILC



# Established in 1994

25
CELEBRATING 25 YEARS

## Kulendran Immigration Law Chambers

90, High Street, Colliers Wood, London Sw19 2BT

Tel: 020 8542 8222

Mobile: 0776918 5592

Email: kilc_work@yahoo.co.uk

# எனது ஊரில் சில வருடங்கள்

## சிறு வயதில் தாயகத்தை விட்டு வந்த சிறுவன் ஒருவனின் கதை

பனையும் தென்னையும் மாமரமும் வாழையும் வீசும் தென்றலில் சரிந்தாடும் சின்னச் சோலையொன்று அதன் நடுவே அமைந்ததுதான் எனது வீடு – என்னைப் பொறுத்தவரை அது என் மாளிகை! எத்தனை இனிய நினைவுகள்!

ஆச்சியின் மடியில் படுத்துக் கொண்டு திலகாம்பாள் மோதகத்துக்குள் இருந்த தங்க மோதிரம் பெற்ற கதையை எத்தனை முறை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு உறக்கத்திற்கு சென்றிருப்பேன்?

அம்மாவின் காலடியில் இருந்து கொண்டு எத்தனை முறை ஆங்கிலத்திலும் தமிழிலும் கதை நூல்கள் படித்து ஆனந்தத்தில் திளைத்திருப்பேன். அப்பாவின் அரவணைப்பில் அவரது துவிச்சக்கர வண்டியில் எத்தனை முறை கோவில்களுக்கு சென்றிருப்பேன்? மாவிட்டபுரமா? கீரிமலையா? கோவில்களுக்கா குறை எம் ஊரில்?

வானம் கனத்து மேகங்கள் கூடி சரசர வென கொட்டிய மழையால் வந்த வெள்ளத்தில் எத்தனை காகித படகுகளை தங்கையுடன் விட்டிருப்பேன்?
அதிகாலையில் சேவலின் கூவலுக்கும், பசுக்கன்றின் கதறலுக்கும், குருவிகளின் ரீங்காரத்திற்கும் துயில் எழுந்து காலைக்கடன் முடிப்பேன். கடவுளை வணங்கிவிட்டு அம்மாவின் கையால் உணவு அருந்திவிட்டு தங்கையை ஏற்றிக்கொண்டு பள்ளிக்கு துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது என்னையறியாமல் ஒரு நிம்மதியைக் கண்டேன்!

மாலையில் நண்பர்களுடன் துடுப்பெடுத்து ஆடிவிட்டு வீடு செல்லும் போது உலகக்கோப்பையை வென்ற முரளிதரன் போல் உவகை கொண்டேன்! என்ன ஒரு வசந்தமான பொற்காலம்? வார்த்தைகள் போதாது அதை வர்ணிக்க!
எல்லா நனவுகளையும் மணல் கோட்டை பொடிப் பொடியாக உடைந்து போல நசித்தது அன்னிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு!
அதை எதிர்த்து புரட்சி செய்வதற்கு ஆர்வம் இருந்தது ஆனால் நான் அப்பொழுது ஒரு சிறிய பொடிப்பிள்ளை! கவிதைகள் எழுதி எனது கோபத்தை பேனாவின் மையால் தீட்டிக்கொட்டினேன்.



சற்காலம் செல்ல எமது ஊருக்குள்ளே வந்தான் எதிரி. அன்று தொடங்கினேன் ஓட! ஊரை விட்டு ஊர் ஓடினேன்! தாண்டினேன் கண்டங்கள்! தனியாக பிரயாணித்தேன் பல நாடுகளுக்கு! பன்னிரண்டு வயதில் வந்தடைந்தேன் ஐக்கிய இராச்சியத்திற்கு! அரவணைத்து ஆளாக்கனார்கள் என் அன்பு சித்தப்பாவும் சித்தியும்.
பணம், படிப்பு, பட்டம், பங்களா, பெரிய வாகனம் என பல வசதிகள் பெற்றும் மனம் சாந்தியடையவில்லையே!

நினைத்துப் பார்ப்பேன் என் ஊரை அடிக்கடி. யுத்தத்தின் சத்தங்கள் கேட்டுக்கொண்டு அங்கு வாழ்ந்த காலத்திலும், எனது தாயகத்தின் சபரிசங்கள் மனக் காயங்களுக்கு ஆறுதலாக ஒத்தடம் கொடுத்துக் கொண்டே இருந்தன. அவை என்னை மீண்டும் இழுக்கின்றன எனது ஊருக்கு!

வைத்தியனாய் எனக்கு ஆண்டவன் தந்த அறிவை எனது உறவுகளுக்கு பலன் பட நான்கு மாதங்களுக்கு ஒருமுறை தாயகம் சென்று இலவச சிகிச்சை வழங்கி வருகின்றேன்.

சற்று நிம்மதியும், ஆனந்தமும் கிடைக்கின்றது அதனால் எனக்கு! என்னால் முடிந்த அளவிற்கு நான் பிறந்த பூமியை பார்க்கவும் இரசிக்கவும் செய்கிறேன். நீங்களும் உங்களால் முடிந்த அளவிற்கு தாயகம் சென்று, நீங்கள் விட்டு விட்டு வந்த இன்பங்களை சற்றேனும் பெறுங்கள். நட்டாற்றில் தவிக்கும் எமது உறவுகளுக்கும் ஆறுதலையும் உதவிகளையும் அள்ளி வழங்குங்கள்!

**வைத்திய கலாநிதி**
**சண்முகநாதன் மயூரன்**



# Kollankaladdy Makkal Ontrium (KMO) Management Committee 2018-2019



**Sitting** (L-R) Mrs N.Ravindran (Secretary), Mrs T Suriyanarayanan, Mrs V Navaratnam, Mrs S Dilipkumar (Treasurer), Mrs G Kumar

**Standing** (L-R) Mr K Mohan (Asst Secretary), Mr E Kugapal, Mr S Kirupakaran (President), Mr V Sokkan (Sports Secretary)

**Absent** Mr V Hariram (Vice president), Mr N Ganamurali (Asst treasurer), Mr S Satheeskumar (Social secretary), Mr P Mahendran, Mr G Raju, Mrs Thampu

SHER-E-PUNJAB-MARKET
FRESH HALAL MEAT, POULTRY, GROCERY
& OFFLICENCE
WESTERN UNION – PAY POINT – INTERNATIONAL
CALLING CARDS – FRESSH FRUITS
AND VEGITABLES




*Best wishes*
*for*
*Kalaikkolunthu 2019*

110- 112 Beaconsfield Road, Southall, Middlesex – UB1 1DR
T: 020 8893 6277 F: 02085716916
E : jnvfoodandwine@yahoo.co.uk

# தண்ணீர்

வானுயர வரம்புயர
வழிவழியாய் பாத்தி கட்டி
நீர் இறைக்கையிலே
ஓடும் அந்த கிணற்று நீர்
பார்த்தோம் அந்த அழகை
வறட்டி நிற்கும் நிலந்தனை
இழுத்து நிற்கும் அந்தநீர்
நிலத்தினிலே போனவுடன்
நின்றவரைக் காணோம் என
ஏங்கி நிற்கும் எம் உள்ளம்
நீரோடும் நிலத்தோடும்
உறவாட இங்கு எழுந்து வாரீர்.
வீட்டுக்கு வீடு
குழாய்க் கிணறுகளும்
வசதியாய் வந்தனவே
சொகுசு என நாம் நினைத்து
காலம்தனை ஓட்டுகிறோம்
மின்னிணைப்பு துண்டித்தால்
மங்கிவிடும் ஒளியும் நீரும்
நன்னீரைச் சேமித்து
நாடும் வீடும் வளம்பெற
சிந்திப்போம் சிறப்பாய் வாழ்வோம்.

என்றும் அன்புடன்
வசந்தா தயாளன்

*With Best Compliments from*

RAJ CLUSTER LTD

# Raj Cluster Ltd

## Trade Name of Shell Forecourts in Hampshire & Surrey Area

22, Fleet Road, Fleet, Hampshire,
GU51 4QG, United Kingdom

www.rajcl.com

info@rajcl.com



# அருள்வாய் ஐங்கர மெய்ப்பொருளே

துதிமுக ரூபனே கணபதியே உனைத்
துதித்தேன் அருள்கண நாதன்நீயே
கதிவே றில்லை உன்னடியே இனி
தஞ்சமென் றுணர்ந்தேன் அருள்வாய்

மாருதப் புரவீக வல்லிபிணி அந்த
மாவையில் மறைந்த நிலைகண்டும்
பெருவடு கண்டும் துதிமுகனே யுனை
நினைந்தே வைத்த முதற்பொருளே

பெருவயி றுடைய பெருமானே பெரும்
பேதமை யாமிருள் களைவோனே
கருணைக் கடலே கணநாதா உனைக்
கைதொழு தேனருள் தருவாயே

முன்னே உன்னைக் கண்டவர்கள் தினம்
முன்னிருள் வேளையில் வலம்வந்த
தன்மைகண் டுன்னடி பணிந்ததிறம் தினம்
கேட்டுளம் மகிழ்ந்திடச் செய்தவனே

முத்தே முதல்வா முக் கண்ணன் எமக்கும்
முன்னே தந்தமு தற்பொருளே
சித்தம் உருகிட உனைத்தொழுதோம் எங்கள்
சிவனுமை மைந்தனே அருள்புரிவாய்

ஔவை அகத்தியர் நம்பியுமே அவர்
அடைந்த பதத்தினை நாமடைய
கௌவை நீக்கி எமையாளும் எங்கள்
கரிமுக கணபதி குணநிதியே

சித்தியும் புத்தியும் தருபவனே எங்கள்
சித்திபு த்திவி நாயகனே
சத்திய ஒளியாய் இருப்பவனே சிவ
சங்கரன் மகனே அருள்வாயே

ஓம்ஓம் கரிமுக கணபதியோம் உயர்
ஓங்கார மந்திர வடிவினனே
எம்துயர் நீக்கி அருள்வாயே அருள்
ஏக தந்தவி நாயகனே

அப்பம் அவல்பொரி மோதகமும்
முப்பழ மோடுநல் கடலைபொரி
எப்பொழுதும் உண்டு களித்திடும் நல்
ஏக தந்தவி நோதன் நீயே

அருள் முகம் காட்டியும் அருள்வாயே எம்
ஐங்கர நாதனே அருள்மநிதியே
இருகரம் குவித்துன் புகழ்பாடி உன்
இணையடி பணிந்தேன் அருள்நிதியே

கொல்லங் கலட்டி தனிலோங்கும்
கோதிலாப் பொருளே துதிமுகனே
வல்லமை தந்தெமை ஆண்டருளும்
வாரண முகத்துவி நாயகனே

கவியாக்கம்
**சு.குகதேவன்**
கொல்லங்கட்டி

# Somar & Co Ltd

**Accountants and Tax Advisors**

**Our Services**

- Book Keeping services
- Payroll services
- VAT services
- Annual Financial statements and Management Accounts
- Business Plans and Cash Flow Forecast
- Corporate taxation
- Self-Assessment Tax and Planning
- Help with Tax Enquiries and Investigations
- Company Incorporations and Company Secretarial

**Thank you**

**For**

**Sponsoring & Supporting**

***கலைக்கொழுந்து*** - 2019

OUR LOCATION

Somar & Co Ltd

11 Park Lane | Hornchurch | Essex RM11 1BB

Phone 020 8911 0872

Email info@somarandco.com




# எங்கள் மண்ணின் மைந்தன்

அன்போடும் பண்போடும் எம் கிராமத்து மக்கள் கூடி வாழ்ந்த வேளையில் 1973ல் கல்வி மான்களாக உருவாக தொடங்கினார்கள். இந்த வகையிலே சிறார்களை திறமை மிக்கவர்களாகவும் நற்பண்புகள் கொண்ட நல்ல பிரஜைகளாக உருவாக்கும் நோக்கில் எமது கிராமத்தின் மைந்தன் என வர்ணிக்கக்கூடியவரான திரு. போஜன் நாகேந்திரன் அவர்கள் சாரணிய குறிக்கோளையும் நோக்கங்களையும் அடிப்படை தத்துவமாக கொண்டு செயற்பட்ட முறைமைகள் இக் கால கட்டத்தில் குறிப்பிட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இயல்பாகவே பலதுறைகளில் திறன்மிக்க சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் அவரவர் திறன்களுக்கு ஏற்ப சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி சிறு சிறு குழுக்களாக வகுத்து அக்குழுக்களுக்கு ஒருவரை தலைமை தாங்க வைத்து தலைமத்துவத்தைப் பகிர்ந்தளித்து சிறார்கள் மூலமாகவும், இளைஞர்கள் மூலமாகவும் பாரிய செயற் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய ஆற்றல்களை வளர்த்தார்.

மேலும் சமூக சேவை என்பது எந்த விதமான எதிர்பார்ப்புமின்றி அடுத்தவருக்கு உதவும் மனப்பான்மையை எமது ஊர் ஆலயங்களிலும், வீடுகளிலும், பெரும் கூட்டங்கள் மத்தியிலும் சிறார்களும், இளைஞர்களும் தனித்துவமாக நின்று செயற்பட கூடிய திறன் கொண்டவர்களாக மிளிரத் தொடங்கினார். பேடன் பவல் பிரபு அவர்களினால் உருவாக்கப்பட்ட இளைஞர் சாரணியத்தின் சத்தியப் பிரமாணத்தை நாம் நோக்குவோமேயானால் பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன் சாரணியத்தில் இணைந்து கொள்ளும் போது கூறும் சத்தியப்பிரமாணம், என்னால் கூடுமானவரை எனது சமயத்துக்கும், நாட்டுக்கும், என் கடமைகளை செய்வேன் என்றும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும், சாரணர் விதிகளுக்கமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது சத்தியம் செய்கிறேன்.

இவ்வாறாக தனது உயிரிலும் மேலான கௌரவத்தின் மீது சத்தியம் செய்கின்ற சிறுவன் சாரணியச் செயற்பாட்டில் ஈடுபட்டு அதன் வழிகாட்டலில் வாழும்போது அவனுடைய அடி மனதில் மேற்கூறப்பட்ட வாக்குறுதி ஆழமாக பதிந்து தன்னை சமுதாயம் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொறுப்புள்ள நற் பிரஜையாக வாழவைக்கும் என்பதனை வாழ்ந்து காட்டிய ஒருவர்தான் எங்கள் மண்ணின் மைந்தன் என வர்ணிக்கப்படும் திரு.போஜன் நாகேந்திரன் என்பது மிகையாகாது.

நன்றியுடன்
**திரு. ஆர். ராஜரஞ்சன்**
கௌரவ மாவட்ட சாரண ஆணையாளர்
(திருகோணமலை)

# Best wishes
# for
# Kalaikkolunthu 2019

From

## S. Kamalakgannan

(founder of Annamma Sittampalam Foundation)

அன்னம்மா அறக்கட்டளை

"அறம்செய்ய விரும்பு"

**அமரர். அன்னம்மா சிற்றம்பலம் அறக்கட்டளை**

**( வன்னிப்பிராந்தியம் - வவுனியா )**

**LET. ANNAMMA SITTAMPALAM FOUNDATION**

**( Regional of Vanni District - Vavuniya)**

# கலைக்கொழுந்து 2017
# சில நினைவுகள்



## KMO(UK) Accounts Summary

**Income:**

| | | |
|---|---|---|
| Life membership fee | | £1,600.00 |
| Events | | |
| Get together on 8th January 2011 | | £546.48 |
| Get together on 21st January 2012 | | £295.06 |
| BBQ Party on 12th August 2012 | | £63.50 |
| Kalai Kolundu on 23rd February 2013 | | £715.66 |
| BBQ Party on 18th August 2013 | | £132.33 |
| Get together on 16th February 2014 | | £134.59 |
| BBQ Party on 17th August 2014 | | £0.27 |
| Kalai Kolundu on 21st March 2015 | | -£214.15 |
| BBQ Party on 22nd August 2015 | | £167.57 |
| Get together on 13th February 2016 | | -£206.52 |
| BBQ Party on 3rd July 2016 | | £225.00 |
| Kalai Kolundu 25.02.2017 | | £1,072.57 |
| BBQ Party on 2nd July 2017 | | £183.20 |
| AGM & Annual Get-together 11th February 2018 | | -£135.00 |
| BBQ Party on 21st July 2018 | | £55.91 |
| | | £4,636.47 |
| **Expenses:** | | |
| Money Donated to Pilliyar Temple 20/01/2011 | £546.48 | |
| Money Send to School 26/04//2013 | £1,000.00 | |
| Money Send to School 05/03/2015 | £389.62 | |
| Sundry Expenses | £190.00 | £2,126.10 |
| | **Cash in hand 31 Dec 2018** | **£2,510.37** |

## Life Members List

1 Mrs Sugitha Dilipkumar
2 Mr Rasiah Hariharan
3 Mr Sinnathurai Kirupakaran
4 Mrs Srigowrydevi Kumar
5 Mr Ponnuthurai Mahendran
6 Mr Gnanamurali Nadarajah
7 Mrs Vasantha Navaratnam
8 Mr Siva Ramachandran
9 Mrs Nalayini Ravindran
10 Mr S Satheeskumar
11 Mr Apputhurai Selvarajah
12 Mr Kamalakannan Sittampalam
13 Mr Veluppillai Sokkan
14 Mr Ponnuthurai Sooriyakumar
15 Mrs Thembamalar Suriyanarayanan
16 Mr Poothappillai Vairavanathan

# KMO UK Events



















Jaylux Digital
Photography & Videography
About Us
Creative lifestyle and portrait photographer based in Harrow, Middlesex providing families with a memory that will last a lifetime.
Our Services
We capture any occasions with full of memories that you can remember forever.
20 years experience
Engagement /Wedding /Reception
Pre-Wedding Shoots / Outdoor Photo shoot
Birthday Parties
Puberty Ceremony
Arangetram
Fashion shoot / Catwalk
Model Portfolio
Sports Photography
Concerts
Public Events.
Jay Jayakumaran
Mob: +44 (0)7583 000 333
Email: info@jayluxdigital.com
Visit our
Website: www.jayluxdigital.com
Find us on Facebook, Twitter
Jaylux
Our clicks, your history
digital

# கொழுந்தினைப் பாடும் தமிழ்பாடும்

கொழுந்தினைப் பாடும் தமிழ்பாடும்
கொடிவிட் டோடிப் படர்ந்தாடும்
செழுமை எங்கும் பண்பாடும்
செல்வம் மனையில் குவிந்திடும்

முன்முருக் கம்மரம் தனிலேறி
முறுவல் காட்டி அதன்சாற்றை
உறுஞ்சிக் குடித்தே உயிர்வாழும்
உண்மை எவர்க்கும் புலனாகும்

நவீனம் தன்னை மிகுவோட்டி
நாடியே பழமை இசைபாட
ஆவித் துணையென முருங்கையதை
அன்புடன் பற்றிநின் றெழில்பாடும்

தண்டினில் ஈரிலை இசைபாட
தானதை எடுத்துச் சுருட்டியுமே
மண்ணில் நாட்டிட மலர்ந்தாடும்
மகாலட் சுமியின் புகழ்பாடும்

இதய வடிவினில் இசைபாடும்
இனிய பூசைப் பொருளாகும்
காத லுடனே தினம்பேணில்
காலம் முழுதும் நலம்சேர்க்கும்

தண்டே உயர்ந்துடன் கொடியாகும்
தளர்வுறு நோய்க்கும் மருந்தாகும்
எண்குணத் தழகன் பீசனைக்கும்
எழில்மிகு வெற்றிலை நலம்சேர்க்கும்

தமிழர் வாழும் இடமெங்கும்
தனிநடம் புரியும் இதன்பெருமை
நாமிங் கிருக்கும் நிலைபாடும்
நற்றமிழ் இசையே பண்பாடும்

சுனாமி என்னும் கடல்கோளால்
துயர்ப்பட் பழிந்த நிலையாடும்
வனப்புறு முருங்கை மறைந்தவழி
வாழ்வுற நல்வழி தேடுகின்றாள்

எத்தனை மரங்கள் இருந்தாலும்
எழிலுறப் பற்றிப் படர்ந்தாட
வித்தென வேர்விட் எழில்பாடும்
விநோதம் கண்டே தேடுகின்றாள்

கொழுந்தின் பெருமை மிகுபாடும்
குவலயம் எங்கும் புகழ்பாடும்
இழுக்கே அன்றி நாம்வாழத்
துணையாய் வந்தெழில் மிருகூட்டும்

கவியாக்கம்
**குகன்**
கொல்லங்கட்டி

**S. Suresh**
Managing Director

THAMARY

**THAMARY BANQUETING HALL**
**M:** 07445 802629, **T:** 020 8838 5505
34 Steele Road, Park Royal, London NW10 7AS
**E:** info@thamary.co.uk, **W:** www.thamary.co.uk

*Best wishes*

*for*

*Kalaikkolunthu 2019*

*From*

*Late Thavanathar family*

*Kollankaladdy*

RUBY'S

CATERING

Sri Lankan & South Indian catering at its best..!







## ELEGANT SERVICE

Whether your event is small or large, our 18 years of experience and reputation in the catering profession guarantee a high quality service. We approach every new project with the same level of enthusiasm and professionalism.

We cover!!!

**WEDDING - SAMATHIYA-SADANGU - ARANG-ETRAM**

**LANDMARK BIRTHDAY - DINNER PARTY**

**CORPORATE FUNCTION**

Tel: 0208 799 7180 / Email: mail@rubyscatering.co.uk

UNIT 4, WALMGATE RD, PERIVALE, MIDDLESEX, UB6 7LH

*With best Compliments*
*to*
*Kalaikkolunthu 2019*

**From**

**Shan Group**
**124 Coventry Road**
**Exhall**
**CV7 9EU**


# நன்றிக்குரியவர்கள்

- எமது அழைப்பையேற்று வருகை தந்த பிரதம விருந்தினர் நகரபிதா கவுன்சிலர் தயாளன் அவர்கள்,
- கௌரவ விருந்தினர் வைத்திய கலாநிதி புனிதமலர் ஸ்ரீதரன் அவர்கள்
- வாழ்த்துச் செய்தி அனுப்பிய பாடசாலை அதிபர், எம் கிராமத்துச் சங்கங்கள்
- இம் மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய எம்மூரினர்
- அழகான நடனங்களை எமக்களித்த நர்த்தகிகள்
- மெல்லிசை விருந்தை வழங்கிய எமது பாடகர்கள், தென் இந்திய பின்னணி பாடகர்கள், Gajan & Free Birds மெல்லிசைக் குழுவினர்
- இவ் விழாவிற்கு சிறந்த முறையில் ஒளி, ஒலி அமைப்பை தந்த Sooriya Sound & Light
- இம் மலர் வெளியிட உதவிக்கரம் நீட்டி விளம்பரங்கள் தந்த வர்த்தக ஸ்தாபனங்கள்
- இவ் விழாவை அழகாக ஒளிப்பதிவு செய்த திரு ராஜன்
- இவ் விழாவை அழகாக புகைப்படம் எடுத்த Jaylux digital நிறுவனத்தினர்
- சிறந்த உணவுதனை வழங்கிய Banana Leaf உணவகத்தினர்
- இவ் விழா சிறப்பாக நடைபெற தோளோடு தோள் நின்று உழைத்த ஒன்றிய உறுப்பினர்கள், நலன் விரும்பிகள்
- இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த ரசிகர்கள் பார்வையாளர்கள்.

திருமதி நளாயினி ரவீந்திரன், செயலாளர்
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம், பிரித்தானியா

# Banana Leaf

*taste with tradition*

அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.

**Tel: 020 8554 4120**
**Mob: 07969 972 202**

Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com

4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2

## We do cater for :

**Wedding**

**Puberty Ceremony**

**Birthday &**

**Arangetram Etc.**




member of Unitas WHOLESALE

FAST TRACK 100 2014 · INTERNATIONAL TRACK 200 2014 · FAST TRACK 100 2015 · 1000 COMPANIES TO INSPIRE BRITAIN 2015 · THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE 2016 · 1000 COMPANIES TO INSPIRE BRITAIN 2017

5 Picketts Lock Lane, Edmonton, London N9 0AS
+44 (0) 20 8887 9303
sales@abrawholesales.co.uk
www.abrawholesales.co.uk

ABRA WHOLESALE

15th ANNIVERSARY EST: 2003

# ABRA WHOLESALE LTD

## LEADING WHOLESALER & EXPORTER

ALCOHOL · TOBACCO · GROCERY · CONFECTIONERY · SOFT DRINKS · TOILETRIES · HOUSEHOLD




WHY NOT DOWNLOAD OUR LATEST **MOBILE APP** TO PLACE ORDERS FROM THE COMFORT OF YOUR STORES

***NATIONWIDE DELIVERY AVAILABLE***

**OPENING HOURS**

MON - FRI 7.00AM - 7.00PM

SAT 7.00AM - 5.00PM

SUN 9.00AM - 4.00PM




"Our mobile app is now working in Android & Iphones Worldwide!"

Available on the iPhone App Store

ANDROID APP ON Google play